**தலைப்பு 308 – தபால் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

தபால் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தபால் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தபால் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 01 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தபால் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுத் திறைசேரியின் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் பிரகாரமும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரமும் முடிவடையாத வேலைகள், போக்குவரத்து, உபகரணங்கள், ஏனைய இயந்திர சாதனம் மற்றும் வாடகைக் கொடுப்பனவு வாகனங்களின் ஆரம்ப மீதிகளில் முறையே ரூபா 62,399,823, ரூபா 38,770,000, ரூபா 40,950,210, ரூபா 10,783,801 என வித்தியாசங்கள் காணப்பட்டன. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். 2021 நிதிக் கூற்றுக்களைக்கணக்கிணக் கம் செய்கையில் கொம்ட்ரோலர் நாயகத்தின் கீழ், காட்டப்பட்ட உபகரணங்களை பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. | நிதி அல்லாத சொத்து மீதியை திணைக்களப் புத்தகத்தின் பிரகாரமும் திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரமும் இணக்கம் செய்ய வேண்டும். |
| (ஆ) | திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரமும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமும் ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | கணக்காய்வு அவதானிப்புக் சரியே. எவ்வாறாயினும், இறுதி குறைநிரப்பு கணக்குப் பொழிப்பை திறைசேரிக்கு அனுகியதன் | நிதி அல்லாத சொத்து மீதியை திணைக்களப் புத்தகத்தின் பிரகாரமும் |

| | | |
|---|---|---|
| என்பவற்றினது இறுதி மீதிகளில் ரூபா 304,582 வித்தியாசம் காணப்பட்டது. | பின்னர், திறைசேரியின் அச்சீட்ப் பிரதிக்கமையவிருந்த சொத்துப் பெறுமதி படி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அப்பெறுமதியானது திணைக்களம் புத்தகப்படி சரியான பெறுமதியோ திறைசேரி அச்சீட்டுப் பிரதியைச் சமர்ப்பிக்கும் போது வாய்மூலமோ கடிதம் மூலமோ அறிவிக்காது சொத்து மீதியில் மாற்றம் செய்துள்ளது. ரூபா 304,583 பெறுமதி சீராக்கலுக்கான மாற்றத்தாள் 2021.03.08 ஆந் திகதி திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | திறைசேரிப் புத்தகத்தின் பிரகாரமும் இணக்கம் செய்ய வேண்டும். |

### 1.6.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தளபாடக் கணக்கு அலுவலகங்கள் 02 க்குரிய தனிப்பட்ட கடன்மீதியின் கூட்டுத்தொகை மற்றும் கட்டுப்பாட்டுக் கணக்கு என்பவற்றுக்கிடையே ரூபா 2,812,091 இனங்காணப்படாத வேறுபாடு நிலவியது. ஒரு மாவட்ட அலுவலகத்தில் 08 ஆண்டுகளாக இருந்துவரும் ரூபா 1,295,400 நிதி மோசடி இதற்கு காரணமாக அமைந்தது. | அனுராதபுரம் மாவட்டக் கணக்கு அலுவலகத்தில் ரூபா 1,900,030 வித்தியாசம் பரிசீலிக்கப்பட்டவாறுள்ளது. களுத்துறை நிதி மோசடி தொடர்பாக ரூபா 149,550 ஓய்வூதியப் பணிக்கொடையில் அறவிடப்பட்டுள்ளது. கணக்கீட்டு வழு காரணமாக ஏற்பட்ட 4,612 சீராக்கப்பட்டும் கண்டிப் அலுவலகத்தில் உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 20,857 தொகையானது 2021.04.20 ஆந் திகதி தீர்வு செய்யப்பட்டு உள்ளது. | தனிப்பட்ட கடன் மீதியும் கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் சமமாக இருக்க வேண்டும். |

### 1.6.3 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

#### வருமானப் பெறுவனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| காசாகத் திருப்பி செலுத்துதல் பிழையைச் சீராக்குதல் என்பன ரூபா 11,982,166 மற்றும் ரூபா 2,406,345 என்பவற்றின் பொருட்டு மாத்திரமே அங்கீகரிக்கப்பட்டிருந்தன. | அங்கீகாரம் வழங்கப்படாத ரூபா 10,491,913 க்கான காரணம், சர்வதேசக் கணக்குப் பிரிவு காசாக மேற்கொண்ட வரவானது பின்னர் ரூபாவின் பெறுமதிக் குறைப்பினால் ஆண்டின் போது ரூபா 7,251,846 மற்றும் எஞ்சிய ரூபா 3,241,067 என்பன மாவட்ட கணக்கு அலுவலகத்தால் குறுக்குப் பதிவு மூலம் ஆண்டின் போது மேற்கொண்ட சீராக்கல் ஆகும். | சகல திருப்பிச் செலுத்தும் பிழைகளைச் சீராக்குதலும் அங்கீகரிக்கப்பட வேண்டும். |

### 1.6.4 ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படவில்லை. | நாளதுவரையாக்கப் பட்டவாறு உள்ளது. | நிதிப்பிரமாணம் 214 க்கமைய பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு பேணப்பட வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 341 இன் பிரகாரம் அடியிதழ்சேர் பதிவேடு பேணப்படவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 314 இன் ஜீ.ஏ.எஸ் 20 மாதிரிப் படிவத்திற்கேற்ப அடியிதழ் சேர் புத்தகப் பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (இ) நிதிப்பிரமாணம் 454(2) க்கமைய மின்சார உபகரணப் பதிவேடு பேணப்படவில்லை. | - மேற்படி - | நிதிப்பிரமாணம் 454 (2) க்கமைய அரசாங்க கட்டிடங்களது சமூக மின்சார துணைப்பாகங்களுக்கும் உபகரணங்களுக்கும் பதிவேடு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான தீர்வு செய்யப்படாத கட்டுநிதி மீதி ரூபா 367,525,560 ஆகும். | குறித்த தினத்தில் கட்டு நிதியைத் திறைசேரியில் தீர்வு செய்ய வேண்டுமாயினும், தபால் அலுவலகங்கள் சனவரி 01 அன்றும் கொடுப்பனவுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதாக டிசம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தத் தொகையையும் திறைசேரிக்கு அனுப்ப இயலாதுள்ளது. திறைசேரியுடன் இணங்கியவாறான தொகையை சனவரி 01 கொடுப்பனவிற்காக நிறுத்தி வைத்து சனவரி நாட்குறிப்பின் மூலம் இந்த ஆண்டின் கட்டுநிதிக் கணக்கின் ஆரம்ப மீதியில் சேர்த்துக் கொள்ளப்படும். | நிதிப்பிரமாணம் 365 க்கமைய கட்டு நிதி தீர்வு செய்யப்பட வேண்டும். |

### 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அரசாங்க கட்டிடங்கள் மற்றும் மனைகளுக்குரிய வாடகை வருமான குறியீட்டுக்குரிய கட்டிடங்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் விடுமுறைத் தங்குமிடங்களிலிருந்து மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 809,795 வருமானத்தை செயலாளர், பொது நிர்வாக அமைச்சிற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், அவ்வருமானம் தபால்மா அதிபரின் வருமானத்தில் கணக்கிலிடப்பட்டிருந்தது. | விடுமுறை விடுதிகளது புனரமைத்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல் செலவினம், பதவியணி என்பற்றிற்குச் செலவாகும் சகல தொகையும் தபால் திணைக்களத்தினதாகும். ஆகவே, அவ்வாறு நடைபெறவில்லை. | வருமானத்தை சரிவர இணங் கண்டு கணக்கில் சீராக்கல் செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரைக்குமான வருமான நிலுவை மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 95,731,166 ஆகும். | சர்வதேச தபால் சங்க கணக்கீட்டுப் பிரமாணங்களிலிருந்து வருமானத்தைச் சேகரிக்க வேண்டியேற்பட்டமை, கொவிட் 19 காரணமான தாமதாம், வியாபார நிலையம் ஒன்றில் தீப்பற்றியமை இதற்கான காரணங்களாகும். நிலுவையாக உள்ள தபால் விற்பனை வருமானம் பகுதி பகுதியாக சேகரிக்கப்பட்டவாறுள்ளது. | வருமான நிதி நிலைமையைத் துரிதமாக அறவிட வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அதிகரித்த நிதி ஏற்பாட்டின் காரணமாக 05 மூலதன விடயங்கள் மற்றும் 04 மீண்டுவரும் செலவின விடயங்கள் என்பவற்றில் ரூபா 214,266,500 எஞ்சியிருந்தது. அது 25 முதல் 97 சதவீதம் வரையறையற்றிருந்தது. | நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமையின் காரணமாக வெளிநாட்டு பயணம் நிறுத்தி வைக்கப்பட்டமை, பொருட் கொள்வனவு தாமதம் அடைந்தமை, நிர்மாண வேலைகள் தாமதமடைந்தமை, பயிற்சிகள் நடைபெறாமை, வரவு செலவுத் திட்ட நிதி ஏற்பாட்டின் வரையறை ஏற்பட்டமை என்பன இவற்றிற்கான காரணம் ஆகும் என தயவுடன் அறிவிக்கின்றேன். | நிதிப்பிரமாணம் 50 க்கமைய சரியாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தர் மேற்கொள்ள வேண்டிய சான்றுறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் | ஏற்றுக் கொள்கின்றேன். நிதிக் கட்டுப்பாடு சம்பந்தமாக | 2018 ஆம் ஆண்டில் 19 ஆம் இலக்க தேசிய |

| | | |
|---|---|---|
| பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் படி திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாடு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்படுகின்ற நிலைமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம் முறைமையின் பயன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறையை பயனுள்ளவாறு பயன்படுத்துவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டுவதுடன், அம்மீளாய்வு எழுத்துமூலமானதாக நடைபெற்று அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவும் வேண்டும். எனினும், அவ்வாறான மீளாய்வு அறிவிப்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. | பயனுள்ளஉள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை தயாரிப்பதற்கு 08 வழிவகைகள் கடைப்பிடிக்கப்பட்டதை தாழ்மையுடன் தெரிவிக்கின்றோம். நிதிக் கட்டுப்பாட்டை முறையாக்குவதற்கு மேற்கொண்ட தீர்மானத்தின் படி உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையில் மாற்றங்கள் மேற்கொள்ள எடுக்கப்படும். சந்தர்ப்பங்களில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக அறிவிக்கின்றோம். | கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்கு தொடர்பான கணக்கிணக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் தற்போது சேவை புரியும் உத்தியோகத்தர் களிடமிருந்து நீங்கலாக, வேலை இடமாற்றஞ் செய்யப்பட்ட, மரணமடைந்த, ஒய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தப்பட்ட, சேவையிலிருந்து விலகிய, மற்றும் ஏனைய தீர்வு செய்யப்படாத மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 56,821,051 ஆகும். இதில் ரூபா 23,702,101 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாகும். | ஓய்வூதியக்காரர்களது ஓய்வூதியத் திணைக்கள நிதியேற்பாடு பொறுப்புக்களும் தீர்வு செய்யப்படும், வேலை நிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் விசாரணை உத்தியோகத்தர் பற்றாக்குறையாலும் கால நீடிப்பாலும் நிறைவு அடையாதுள்ளது. கடன் மீதி பிணையாளர்களிடமிருந்து பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 05 | கடன் மீதி துரிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டும். |

ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதியில் ரூபா 146,791 தொகையானது 2021 மார்ச்சில் வழங்கப்பட்டுள்ள எஞ்சிய மீதியை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை XXIV அத்தியாத்தின் 4.5 ஆம் பிரிவு | 15,776,735 | அரசாங்கம் அறவிட வேண்டிய கடன் தொகை கடன்பட்டோரிடமிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பங்களில் அக்கடன்களைப் பிணையாளிகளிடமிருந்து அறவிட வேண்டும். எனினும், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் அறவிடப்படாதிருந்தது. | பிணையாளிகள் உள்ள கடனை அறவிடுமா்று சகல உத்தியோகத்தர் களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. சில உத்தியோகத்தர் களிடமிருந்து கடன் சம்பந்தமாக சாதகமாக பதில் கிடைக்காத போதும் சிலரிடமிருந்தும் அறவிடல் மேற்கொள்ளப்பட்டம் தவணை ரீதியில் அறவிடப்பட்டும் உள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணங்கள் 110 மற்றும் 102 | 4,584,188 | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் 35 வாகனங்களது இழப்பானது இழப்பு மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் பதியப்படவில்லை. | 2020 இழப்பீடு சம்பந்தமான விபத்துக்களின் விபரம் இயந்திரப் பிரிவிலிருந்து தபால் போக்குவரத்து பிரிவுக்கு இதுவரை கிடைக்கவில்லை. 2020 விபத்துக்களது காப்புறுதி இழப்பீடும் முடிவடையாமையும் இதற்கான காரணங்கள் ஆகும். | நிதிப் பிரமாணம் 110 மற்றும் 102 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2018 யூலை 26 ஆந் திகதிய 3/2018 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | திணைக்களத்தின் செயற்படாத வங்கிக் கணக்கு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வங்கி கணக்கு இலக்கம் 045-1001-1-9027341 ஐ முதலிடுவதற்கு திறைசேரிச் செயற்பாட்டுத் திணைக்களத்துடன் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>-------------------- | | | | |
| | 5.3.1(ஈ) | 5,254,686 | கேள்விகளுக்கான தொழில்நுட்பக் குழு மற்றும் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதும், குளிரூட்டிகளையும் டயர்களையும் கொள்வனவு செய்யும் போது அவ்வாறு நடைபெறவில்லை. | சந்தை விலை நடைமுறை இதற்கென கடைபிடிக்கப்பட்டது. எதிர்காலத்தில் பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 5.3.1(ஈ) கடைப்பிடிக்கப்படும். | அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.7 வங்கிக் கணக்கைச் செயற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தலைமை அலுவலக 9027330 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் 2008 தொடக்கம் ரூபா 50,000 இனங்காணப்படாதுுள்ள கொடுப்பனவை இனங்காண்பது 2020 திசெம்பர் 31 வரை தவறியிருந்தது. | இது சம்பந்தமாக அரச நிதித் திணைக்களத்திடம் வினவப்பட்டது. நி.பி 486(4) பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது. அதற்கமைய குழு நியமிக்கப்பட்டு அவதானிப்பும் பரிந்துரையும் வழங்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | இனங்காணப்படாத கொடுப்பனவை இனங்கண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இழப்புக்களும் நட்டங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இழப்புக்கள் மற்றும் விட்டுவிடுதல் கூற்றில் குறிப்பிட்ட 05 முதல் 10 ஆண்டுகள் வரையிலான ரூபா 14,171,700 இழப்புக்கள் மற்றும் நட்டங்களைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தபால் அலுவலகங்கள் 03 க்குரிய பதிவழிப்பு சம்பந்தமாக கோவையில் திருத்தம் மேற்கொள்ள அனுப்பப்பட்டுள்ளது. தபால் அலுவலகங்கள் 03 இன் இழப்பை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பண மோசடி, களவு என்பனவும் உள்ளடங்கியுள்ளமையால் வழக்கு விசாரணை முடிவுவரை பதிவழிப்பு தாமதம் ஆகின்றது. | இழப்புக்களும் நட்டங்களும் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிலோவோட் 500 உற்பத்தி செய்யும் மின்உற்பத்தி சாதனப் பராமரிப்புக்கான உடன்படிக்கை 2002 ஆம் ஆண்டில் 6 மாதகால சேவைக்கென மின்சார சபையுடன் உடன்படிக்கை செய்யப்பட்டபோதும், சேவை எதுவும் வழங்கப்படவில்லை. | பல தடவைகள் கோரிய போதும் இலங்கை மின்சார சபை சேவையை வழங்காதிருந்தது. | சேவை உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) திணைக்களத்துக்குரிய கட்டடிங்களை பெறுமதியிடுவதற்கு விலைமதிப்புத் திணைக்களத்தை நாடாது இருந்த தபால் அலுவலகக் கட்டிடங்கள் 06 ஆகும். 12 தபால் அலுவலகங்களின் அளவைப் பத்திரங்கள் இன்மையாலும் அவ்வாறிருந்தன. | தொலஸ்பாகே, திவுல்தமன, மல்வத்தை, நெலும்வெவ, வதுராவ, கோனவல தபால் அலுவலக காணிகளது அளவைகளும் ஒப்படைப்பும் சான்றுறுதிப்படுத்தப் பட்டுள்ளன. 2020.09.07 அன்று அவற்றை விலை மதிப்பீடு செய்வதற்கு | திணைக்களத்தின் சகல கட்டிடங்களும் பெறுமதியிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுப்பப்பட்டுள்ளன. 2019 ஆம் அண்டில் திணைக்களம் சுவீகரித்த இத்தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் அரச கட்டிடங்களில் உள்ளன. 2019.09.03 அன்று பிரதேச தபால் அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டவாறுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டில் 16 தபால் மற்றும் உப தபால் அலுவலகங்களை சுவீகரிப்பதற்கும் அளவை யிடுதலுக்கான நடவடிக்கை களுக்கும் ரூபா 762,480 செலவிடப்பட்டிருந்த போதும் 2021 மார்ச் 15 ஆந் திகதியளவிலும் காணிகளைச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | நில அளவைத் திணைக்களத்திற்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆண்டில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக அளவையானது உரிய நேரத்தில் நடைபெறாமை இதற்கான காரணமாகும். அளவை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு அவசியப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | காணிச் சுவீகரிப்பு துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | அஞ்சலதிபரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் சம்பந்தமாக தபால் திணைக்களம் மற்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பவற்றிலிருந்து பெறப்பட்ட தகவல்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் 87 வாகனங்களது தகவல்கள் திணைக்களத்திடம் இல்லாதிருந்தன. 60 ஸ்ரீ 7256 இலக்க பஸ் வண்டி பாவனையில் ஈடுபடுத்தப்படாதிருந்தும் அது தொடர்பான தேவையான எதிர்கால நடவடிக்கைகள் நடைபெறாதிருந்தன. | 1956 முதல் 2001 வரை பதிவு செய்யப்பட்ட 87 வாகனங்களில் 20 வாகனங்களது தகவல்கள் மாத்திரம் கண்டுபிடிக்கப்பட்டன. எஞ்சிய வாகனத் தகவல்கள் திணைக்களத்திடம் இல்லாதிருப்பதுடன், வாகனங்களது உரிமையாளர்கள் தொடர்பான விபரம் மாத்திரமே மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது.<br><br>தற்காலிகமாக பெறப்பட்ட 03 வாகனங்கள் 2020.09.03 ஆந் திகதி மீண்டும் அந்த | தபால் திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட வாகனங்களது தகவல்கள் திணைக்களத்திடம் இருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அமைச்சுக்களிடம் வழங்கப்பட்டுள்ளன.<br><br>வாகனத்தை கைதவிர்ப்புச் செய்வதற்கு செஸி இலக்கம் இல்லாததால் விலை மதிப்புத் திணைக்களம் விலை மதிப்பில் ஈடுபடாது கைதவிர்ப்புச் செய்ய முடியாது போனது. | |
| (உ) | பொருட் கணிப்புச் சபை அறிக்கையின் பிரகாரம் முத்திரைக் கையிருப்பு பதிவேட்டிற்கும் நேரடிச் சரி, பிழை பார்த்தல் எண்ணிக்கைக்கும் இடையே ரூபா 379,187 பெறுமதியுடைய 41 முத்திரைகளில் அதிகரிப்பும் ரூபா 590,430 பெறுமதியுடைய 250 முத்திரைகளின் குறைவும் நிலவின. | 2020 டிசம்பர் 21 இல் உள்ளவாறு முத்திரை மற்றும் அதனோடு இணைந்தவற்றின் கையிருப்பு சம்பந்தப்பட்ட 8 உத்தியோகத்தர்களது அதிகரிப்பும் குறைவும் காணப்பட்டது. தற்சமயம் அவ்வதிகரிப்பும் குறைவும் சீராக்கப்பட்டவாறுள்ளது. அவ்வுத்தியோகத்தர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்திற்கு வெளியே உள்ளமையால் நிலவும் தடை காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. நடவடிக்கையின் பின்னர் கணக்காய்வுக்கு அறிவிக்கப்படும். | அதிகரிப்பும் குறைவும் ஏற்படாதிருக்கும் விதத்தில் உள்ளகக் கட்டுப்பாடு அமைய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு நாரஹேன்பிட்ட முத்திரைப் பிரிவில் விற்பனைக்குப் பொருத்தமற்ற பயன்படுத்த முடியாத ரூபா 1,782,317 பெறுமதியான முத்திரை எழுதுகருவி வகைப் பொருட்களை நெடுங்காலமாக களஞ்சியத்தில் இருந்தன. நிதிப்பிரமாணம் 350(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. | இந்த ரூபா 1,782,317 பெறுமதியான முத்திரை எழுதுகருவி வகைப் பொருட்களுக்கு நிதிப் பிரமாணம் 350(4) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பொதுத் திறைசேரி உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவின் அறிக்கையை அடுத்து 350(4) ஆம் நிதிப் பிரமாணப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | இது தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நாராஹேன்பிட முத்திரைப் பிரிவின் முத்திரைக் கட்டுப்பாட்டு பிரிவுப் பேரேட்டு மீதிக்கும் உள்ளவாறான மீதிக்குமிடையே ரூபா 2,476,800 பெறுமதியான முத்திரைக் கையிருப்புக் குறைவு உள்ளது. | இக்குறைவானது பல சந்தர்ப்பங்களில் உருவாகியவை ஆகும். இது சம்பந்தமாக ஒவ்வொரு வருடமும் திறைசேரியால் விசாரிக்கப்படுவதால் இதனை விசாரிக்குமாறு பரிசோதனைக்கு கட்டுப்பாட்டாளர் கோரப்பட்டுள்ளார். விசாரணை அறிக்கையின் பிரகாரம் இக்குறைவானது 1984 தொடக்கம் அவ்வவ்போது ஏற்பட்ட குறைவுகள் எனவும் திணைக்கள உத்தியோகத்தர் இவ்விடயத்தில் சம்பந்தப்படவில்லை எனவும் இக்குறைவானது மோசடி, அளவு காரணமானவை அல்ல எனவும் தெரிய வந்ததுடன் கணக்கிடும்போது ஏற்பட்ட குறைவே எனவும் தெரிய வந்தது. இம்முத்திரைகள்10 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிடப்பட்டனவாகும். ஆகவே, குறித்த கம்பனியிடமிருந்து அறவீடு மேற்கொள்ளப்பட முடியாதுள்ளது. ஆகவே, பதிவழிப்புக்கு பரிந்துரைக்கப்பட்டு அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டவாறுள்ளது. | பதிவேட்டுக் கையிருப்பு உள்ளவாறான கையிருப்புடன் இணக்கம் செய்ய வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தபால் திணைக்களத்தின் ஏனைய தரங்கள் மற்றும் சேவைகளில் 1,965 வெற்றிடங்கள் இருந்தன. இதில் 61 சிரேஷ்ட | அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பூரண அங்கீகாரம் பெறப்படாமை, போதியளவு தகைமைகளைப் பூர்த்தி | வெற்றிடங்களை நிரப்பி திணைக்களம் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் இயங்க நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | மட்டத்திலான வெற்றிடங்களும் உள்ளடங்கி இருந்தன. அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செய்த உத்தியோகத்தர் பற்றாக்குறை என்ப இதற்கான காரணமாகும். சிரேஷ்ட மட்டத்திலான 03 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு உள்ளனர். மூன்றாம் நிலைப்பதவிகளுக்கென ஆட்சேர்ப்பு நடைமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டவாறுள்ளது. இரண்டாம் நிலைப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரம் பேறப்பட்டுள்ளது. எனினும், ஊடக அமைச்சின் செயலாளரது அறிவுறுத்தலின் பிரகாரம் குறித்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறுள்ளது. உப தபால் அலுவலகங்களில் பதில் கடமையாற்றுவோர் பயன்படுத்தப்படுவர். ஆரம்ப மட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | எடுக்க வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1139/vi இலக்க 2016 யூலை 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் உதவித் தபால் அத்தியட்சகர் பதவிகளில் 106 பதவி அதிகரிப்புக்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட போதும், அவ்வெற்றிடங்கள் நிரப்பப்படுவதானது தவறியிருந்தது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட 106 MN-07 பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வாறுள்ளன. | அத்தியாவசிய பதவிகளுக்கு துரிதமாக ஆட்சேர்க்கப்பட வேண்டும். |